செ. கு. எண்:179 நாள் :19.09.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.9.2014

திருவண்ணாமலை நகரம், அண்ணா நுழைவு வாயில் அருகே சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு கிரிவல பக்தர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த முதலுதவி சிகிச்சை தற்காலிக முகாமில், சிகிச்சை பெற வந்த திருநெல்வேலி நகரம், பாரதி நகரைச் சேர்ந்த திரு. சுவாமிஜி என்பவரின் மகன் அங்கப்பன் 15.5.2014 அன்று மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. அங்கப்பன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் திருவண்ணாமலையைச் சேர்ந்த திரு. பூர்ணசந்திரன், சிதம்பரத்தைச் சேர்ந்த திரு. ராகுல் பிரசாத் ஆகியோர் காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த அங்கப்பன் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**